செ.வெ.எண். 53 நாள்: 18.08.2017

**<u>திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பதிவு பெற்ற குழந்தைகள் இல்லங்களைச் சார்ந்த கண்காணிப்பாளர் மற்றும் நிர்வாகிகளுக்கு குழந்தைப் பாதுகாப்பு மற்றும் தனிநபர் கவனிப்பு படிவம் தயார் செய்தல் குறித்த ஒருநாள் பயிற்சி கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்.</u>**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகின் சார்பாக, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பதிவு பெற்ற குழந்தைகள் இல்லங்களைச் சார்ந்த கண்காணிப்பாளர் மற்றும் நிர்வாகிகளுக்கு குழந்தைப் பாதுகாப்பு மற்றும் தனிநபர் கவனிப்பு படிவம் தயார் செய்தல் குறித்த ஒருநாள் பயிற்சி இன்று (18.08.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப.., அவர்கள் பங்கேற்று உரையாற்றினார்.

திருநெல்வேலி மாவட்டத்தில், பதிவு பெற்ற 86 குழந்தைகள் இல்லங்கள் உள்ளது. இதில் 3086 குழந்தைகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். குழந்தைகள் காப்பகங்களை நிறுவகிப்பவர்கள் மிகுந்த பாசத்துடன் குழந்தைகள் மீது அக்கறையுடன் இப்பணிகளை செய்ய வேண்டும். அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு அனுமதி பெற்று நடத்திட வேண்டும். நமது மாவட்டத்தில் முறையாக பதிவு செய்யப்படாத குழந்தைகள் காப்பகங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு மூடப்பட்டுள்ளது. காப்பகத்தில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் ஆதார் எண் பெறுவது மிக முக்கியமான ஒன்றாகும். மேலும், அனைத்து குழந்தைகளுக்கும் பாதுகாவலர் மூலம் வங்கிக்கணக்கு தொடங்கி அதை ஆதார் எண்ணுடன் இணைக்க வேண்டும். இப்பணி மிக முக்கியமான பணியாகும். இதில் தனிக்கவனம் செலுத்திட வேண்டும். காப்பகங்களிலேயே ஆதார் முகாம் நடத்தி இப்பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்.

குழந்தைகளின் சுகாதாரம், படிப்பு மற்றும் குழந்தைகளின் தனித்திறனை மேம்படுத்துவது உள்ளிட்ட நல்ல பழக்க,வழக்கங்களை கற்றுத்தர வேண்டும். தமிழக அரசு காப்பக குழந்தைகளின் பாதுகாப்பினை கருத்திற்கொண்டு இது போன்ற பயிற்சிகளை ஏற்பாடு செய்துள்ளது. இப்பயிற்சியில் கூறப்பட்டுள்ள கருத்துக்களின் மீது சிறப்பு கவனம் செலுத்தி அவைகளை செயல்படுத்தி குழந்தைகளின் காப்பகங்களை சிறப்பாக நடத்திட வேண்டும் என பேசினார்.

மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம் அவர்கள் இப்பயிற்சியினைத் துவக்கி வைத்தார். மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்கும் செயலர், நீதிபதி திரு.ஏ.ராமலிங்கம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினார். இப்பயிற்சியில் மாவட்டத்திலுள்ள 86 குழந்தைகள் இல்லங்களைச் சார்ந்த 170 பேர் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சியில், பாதுகாப்பு அலுவலர் கார்த்திகா இல்லக் குழந்தைகளுக்கு தனிநபர் கவனிப்பு படிவம் தயார் செய்தல் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். சமூகப்பணியாளர் ஜான்சிராணி குழந்தைகள் கமிட்டியின் செயல்பாடுகள் குறித்தும் அதன் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைத்தார்.

பாதுகாப்பு அலுவலர் ஜெயசீலன் இல்ல மேலாண்மைக் குழுவின் முக்கியத்துவம் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்து விளக்கமளித்தார். கணக்காளர் சந்திரகலா இல்லங்களில் பராமரிக்கப்பட வேண்டிய பதிவேடுகள் மற்றும் கணக்கு விபரங்கள் பராமரிப்பது குறித்து விளக்கமளித்தார்.

இல்லங்களை செயல்படுத்துவதில் இல்ல நிர்வாகியின் பங்கு மற்றும் பொறுப்புகள் குறித்து மாவட்ட குழந்தைப் பாதுகாப்பு அலுவலர் திரு.B.S.தேவ் ஆனந்த் அவர்கள் எடுத்துரைத்தார்.

**வெளியீடு :** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி